ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2337/08 - 2023 ජූනි මස 20 වැනි අඟහරුවාදා - 2023.06.20

*2337/08 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**படிவம் 15 (விதி 20)**

நீதிமன்ற மேற்பார்வைக்கமைவாக ஒடுக்கப்படுவதற்கான கட்டளை

**(குடியியல் நியாயாதிக்கத்தை செயற்படுத்துகின்ற) கொழும்பிலுள்ள மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில்**

இல. 181/1/A, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட சென்ரல் இன்வஸ்ட்மன்ட்ஸ் என்ட் பினான்ஸ் லிமிடட் இன் ஒடுக்குதல் தொடர்பான விவகாரத்தில்

மேலும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி XII மற்றும் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 37(6) உடன் வாசிக்கப்படுகின்ற பிரிவு 32 ஆகியவற்றின் கீழ் மற்றும் பிரகாரம், நீதிமன்ற மேற்பார்வையின் கீழாக, சென்ரல் இன்வஸ்ட்மன்ட்ஸ் என்ட் பினான்ஸ் லிமிடட் இன் ஒடுக்குதல் தொடர்பான விவகாரத்தில்

| | |
|---|---|
| வழக்கு இல. | : CHC 91/2019/CO |
| தன்மை | : ஒடுக்குதல் |
| நடபடிமுறை | : சுருக்கம் |
| பெறுமதி : - | |

வீரப்புலிகே ரணவீர,
பணிப்பாளர்,
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு 01.

*மனுதாரர்*

1A - G 39738 — 26 (2023/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

09 ஆம் நாள் யூன் மாதம் 2023 அன்று கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம், மனு மற்றும் இன்னபிறவற்றின் மேல், சொல்லப்பட்ட சென்ரல் இன்வஸ்ட்மன்ட்ஸ் என்ட் லிமிடட் இன் ஒடுக்குதலினை நீதிமன்ற மேற்பார்வைக்கமைவாக மேற்கொள்ள கட்டளையிட்டது ; மற்றும் நீதிமன்றம் திரு. ஜெராட் ஜீவானந்தன் டேவிட், எஸ் ஜே எம் எஸ் அஸோஸியேட்ஸ், 3 ஆம் மாடி, இல.11, காசல் ஒழுங்கை, கொழும்பு 04 சொல்லப்பட்ட கம்பனியின் ஒழிப்போனாக நியமிக்கப்பட கட்டளையிட்டது. மேலும், நீதிமன்றம் அடுத்த 25 ஆம் நாள் யூலை மாதம் 2023 அன்று, மற்றும் அதிலிருந்து ஒவ்வொரு மூன்று மாதங்களும் சொல்லப்பட்ட கம்பனியை ஒடுக்குதலின் நிலை, மற்றும் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பாகவும், மற்றும் அதன் சொத்துக்களின் பணமாக்கம், மற்றும் நீதிமன்றம் காலத்திற்கு காலம் பணிக்கின்ற ஒடுக்குதலுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பாகவும் எழுத்திலான அறிக்கையொன்றை சொல்லப்பட்ட திரு. ஜெராட் ஜீவானந்தன் டேவிட் நீதிமன்றத்தின் செயலாளரிடம் கோப்பிட வேண்டுமென கட்டளையிட்டது, மேலும் நீதிமன்ற செயலாளரால் அத்தகைய செலவுகள், கட்டணங்கள், அல்லது செலவினங்கள், ஊதியம் மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டாலொழிய, சொல்லப்பட்ட கம்பனியின் ஒழிப்போனால் பணியமர்த்தப்பட்ட எவரேனும் சட்டத்தரணியின் செலவுகள், கட்டணங்கள், அல்லது செலவினங்கள் அல்லது விசேட ஊதியம் அல்லது அத்தகைய ஒழிப்போனின், அல்லது எவரேனும் முகாமையாளரின், கணக்காளரின், ஏலம் விடுபவரின், தரகரின், அல்லது வேறு நபரின் ஏதேனும் ஊதியம், கட்டணம், அல்லது செலவினங்களுக்கான பற்றுச்சீட்டுகள் எதுவும் சொல்லப்பட்ட கம்பனியின் சொத்துக்களிலிருந்து செலுத்தப்படலாகாது என நீதிமன்றம் கட்டளையிட்டது. மேலும் அத்தகைய அனைத்து செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் ஊதியம், மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கேற்ப உறுதி செய்யப்படவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டது. மேலும், சந்தர்ப்பம் இருப்பதால், மனுதாரர் தனது செலவுகளுக்கும், மற்றும் சொல்லப்பட்ட கம்பனியின் கடன்தருநர், உதவுதொகை செலுத்துநர், மற்றும் ஒழிப்பாளன், மற்றும் அக்கறையுள்ள மற்றைய நபர்கள் பொதுவாக விண்ணப்பிப்பதற்கான சுதந்திரம் காணப்படுகிறது என நீதிமன்றம் கட்டளையிட்டது.

பணிப்பாளர்,
வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

இல. 30,
சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

EOG 06 - 0152